


# பரலோக பொக்கிஷங்கள்

ஆவியானவர் நம்மீது தங்குவார்! [யோவான் 1:33]



## "தேவனுக்கு புகழ்ச்சி பலி" உண்டாகட்டும்!

நமக்கொரு 'பலிபீடம்' ஏற்படுத்தி வழங்கியவர், ஆண்டவர் இயேசு! (எபி.13:10). அது எப்படியெனில், பழைய ஏற்பாட்டில் ''பலியின் சரீரம் சுட்டெரிக்கப்பட்டது போலவே'' என, 11-ம் வசனம் முக்கியப்படுத்தி கூறுகிறது! அதுபோலவே 'புதிய ஏற்பாட்டில்' இயேசு தனக்கு ஏற்பட்ட 'அவமானத்தை' பொருட்டென்று எண்ணாமல், ''சுய சித்தத்தை'' தன் சிலுவை சுமந்து, நகரத்திற்குப் புறம்பே, பாடுபட்டு மரித்து ஜீவனைக் கண்டடைந்தார்! அந்த ''ஜீவனையே'' தேவனுடைய புகழ்ச்சிக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார்! அந்த பலியில் தேவன் பிரியமாயிருந்தார்! இப்போது, நாமும் 'அவரிடத்திற்குச்' சென்று அவரைப்போலவே 'நம் சிலுவை சுமந்து'....

**தேவனுக்கு புகழ்ச்சி பலி, நாள்தோறும் செலுத்துவோமாக!**
(எபிரெயர் 13:15).

-tr



## ‘சினேகம் நிறைந்தவனே’ கிறிஸ்தவன்!

“தேவனை நேசிப்பவன், தன் சகோதரனையும் நேசிக்கிறான்” என்ற சத்தியத்தை தன் இருதயத்தில் நிரந்தரமாய் பதித்துக் கொள்பவனே, கிறிஸ்தவன்! ஆகவே, இவன் தன்மீது எவ்வளவு கவனம் செலுத்துகிறானோ, அதே அளவு கவனத்தை தன் அயலானிடத்திலும் செலுத்துவான். ஆம், இவன் இருதயம் ஒவ்வொருவருக்காகவும் அன்பினால் நிறைந்து ததும்பியிருக்கும். “விசேஷ நண்பர்கள்” என்ற குறுகிய வட்டத்திற்குள் இவனுடைய அன்பு தேங்கிவிடாமல் எல்லா மனுஷரையும் நேசிக்கும் பரந்த உள்ளம் கொண்டோனாயும் இருப்பான். இவனை பகைப்பவர்கள் கூட, பதிலுக்கு ‘அன்பையே’ பெற்றுக் கொள்வார்கள்! தன்னை பகைத்து தூஷிப்பவர்களுக்கு நன்மை செய்திட தன்னிடம் திராணியில்லாத பட்சத்தில், அவர்களுக்காக அன்போடு ஜெபிப்பான். இவ்வாறாக, அவனுடைய இருதயம் எப்போதும் ஓர் சுத்த இருதயமாகவே திகழ்ந்திடும்! அவன் இருதயத்தில் பொறாமை, பகை, பழிவாங்குதல், பெருமை.... ஆகியவைகளுக்குப் பதிலாக, சாந்தமும் பொறுமையுமே எப்போதும் குடி கொண்டிருக்கும். அப்படியிருந்தும், இவன் தனக்குரிய பெலவீனத்தையோ நேர்மையாக மதிப்பிட்டு, தாழ்மையாய் இருப்பான்!

*-Ed*

**2026 ‘பரலோக பொக்கிஷங்கள்’ சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **மார்ச் 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் ‘புதிது’ என்று குறிப்பிடவும்.நன்றி!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலம் **G-Pay** அனுப்பலாம்.

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## கர்த்தரே சிறுமைப்படுத்தினால் 'உயர்த்தாமல்' இருப்பாரோ!

*அவரது கரத்தில் அடங்கி வாழ்வது பாக்கியம்*

நம்மை நெருங்கும் துன்பங்களுக்கு, ஒரு எல்லையை தேவன் வைத்திருக்கிறார். அந்த எல்லைவரை வந்தபிறகு, தேவன் அந்த துன்பத்தை நீக்கிவிடுகிறார். **'அவர் நடத்திய துன்பத்தின் பாதை'** என்ற விசுவாசம் உங்களுக்குள் இருக்கிறதா? அவ்வித விசுவாசம் கொண்ட யாவருக்கும், கர்த்தரே நியமனம் செய்த துன்பத்தின் எல்லையை நீங்கள் அடைந்தபிறகு 'அந்த துன்பத்தை' உங்களை விட்டு நீக்கிட கர்த்தரே விரைந்து வருவார்!

துன்பத்தில் விளைந்த 'ஆசீர்வாதங்களைக் கண்டு' நீங்கள் தேவனை மகிமைப்படுத்தும் பாக்கியத்தை கண்டடைவீர்கள்!

> **"அதேசமயம், துன்பத்தின் மூலம் கர்த்தர் தர விரும்பிய ஆசீர்வாதங்களை நீங்கள் பெற்றுக்கொள்ளும்வரை அந்த துன்பம் உங்களைவிட்டு நீங்கிட கர்த்தர் விரும்பமாட்டார்!**

*ஒருவேளை, இன்றோ அல்லது நாளையோகூட கொந்தளிக்கும் சமுத்திரத்தை தேவன் அமைதிப்படுத்திட கூடும்! சீறி வந்த அலைகள் அமர்ந்து "சல சல என்று ஓடும் மெல்லிய அலைகளாய் மாறவும், அந்த அலைகளில் அழகிய கடல்பறவை அமர்ந்து அசைந்தாடி வருவதும்" சீக்கிரமாய் சம்பவித்துவிடும் என்ற எண்ணம், உங்கள் மனதை பரவசப்படுத்துகிறதல்லவா!*

அதெப்படியெனில், நீங்கள் எந்தளவிற்கு துன்பங்களை சகித்தீர்களோ 'அந்தளவிற்கு' மகிழ்ச்சியையும் பெற்று விட்டீர்கள்! உண்மைதான், இருளை பகலாய் மாற்றும் செயல் நம் ஆண்டவருக்கு கடினமான செயல் அல்ல! நம்மைச் சுற்றிலும் கார்மேகங்கள் சூழும்படி செய்தவர், அதை அகலும்படி செய்வது, அவருக்கு எளிதான செயல் அல்லவா! **இப்படியெல்லாம் எதிர்பார்க்கும் ஒரு நம்பிக்கை** கிறிஸ்துவுக்குள் நமக்கு இருக்கிற படியால், சோர்வு நீங்கி களிகூர்ந்திடக்கடவோம்.

ஒரு நல்ல விவசாயியைப் போலிருக்கும் நம் ஆண்டவர், களத்தை எப்போதும் போரடிக்க மாட்டார்.... அது சொற்ப காலமே! அழுகையின் பள்ளதாக்கும் சொற்பகாலமே! 'அந்த சொற்பகாலம்' உங்களைவிட்டு சீக்கிரம் விலகிச் சென்றுவிடும் என்பதை விசுவாசித்து, நம்பிக்கையுடன் காத்திருங்கள்.

"அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவம்" என்ற வாக்குதத்தம் உங்களுக்கு சொந்தமாய் மாறுவதாக! (2கொரி 4:7). ஏனெனில், ஒரு சிறந்த 'மகிமையான' நோக்கத்தோடு மாத்திரமே கர்த்தர் நமக்கு துன்பங்களை அனுமதிக்கிறார். ஆகவே, நாம் கடந்து செல்லும் பாதை, எனக்குரியது! எனக்குத் தேவையானது! என உணர்ந்து கர்த்தரை ஸ்தோத்தரிப்போமாக.

> "
> **அக்கினிமயமான சோதனைகள் நமக்கு கூறும் செய்தி என்னவென்றால் "தேவனுக்குப் பிரியமான ஒன்று" நமக்குள் இருக்கிறது என்பதையே தெளிவுப்படுத்துகிறது!**

அப்படி இல்லாதிருக்குமென்றால், அவ்வளவு பிரயாசம் எடுத்து தேவன் தன் நேரத்தை நம்மில் செலவிடமாட்டார். நம்முடைய கற்பாறையான தன்மையில் '**விலையேறப்பெற்ற விசுவாசம் என்ற தங்கம் கலந்துள்ளது**' என்பதை அவர் கண்டபடியால், அந்த தங்கத்தை சுத்திகரித்து, தனக்கென்று வைத்துக்கொள்ள 'சோதனையின் நெருப்பை' நாம் கடந்துச்செல்ல அவர் அனுமதிக்கிறார்!

உபத்திரவத்திற்குள் பிரவேசிக்கும் பிரியமானவனே, கொஞ்சம் பொறுமையாயிரு! அப்போது இந்த அற்ப சோதனைகள், மேலான கனத்தையும், நித்திய மகிமையையும் உனக்கு வழங்குவதை நீ கண்டு தேவனை மகிமைப்படுத்துவாய். நீங்கள் சுதந்தரிக்கப்போகும் தேவனுடைய மகிமையான ஆசீர்வாதங்கள், நீங்கள் கடந்து வந்த துன்பத்தைவிட 'எத்தனையோ மடங்கு' அதிகமாய் இருப்பதைக் கண்டு பிரமித்துப்போவீர்கள்!

இத்தனை மகிழ்ச்சியான நேரத்தில், உங்கள் காது கேட்கும்படி "உன்னை நான் சிறுமைப்படுத்தினேன், இனி உன்னைச் சிறுமைப்படுத்தாதிருப்பேன்" என உங்கள் மனம் மகிழ அவர் உங்களிடம் கூறும் இந்தப் பொன்னான தேவ வாக்கு உங்கள் உள்ளத்தை பூரிக்கச் செய்வதாக! (நாகூம் 1:12). இன்று மாத்திரமல்ல, உங்கள் ஜீவியகாலம் முழுவதும் 'கர்த்தருடைய செயலை' அறிந்து வாழ்வீர்களாக! ஆமென்.

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

## முழு அர்ப்பணமே, மெய் ஆராதனை!

*தேவனை பிரியப்படுத்தி வாழ்ந்திடுவோமாக*

"**யா**தொன்றையும் உடைமையாக்காதிருக்கும் பாக்கியம்!" தேவத்துவம் நிறைந்தது. ஆம், அன்று மோரியா மலையில் "சகலத்தையும் இழந்து, ஒன்றையும் சொந்தமாக்காதிருக்கும் பாக்கியத்தையே" தேவன் ஆபிரகாமிற்கு கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார். அதுநாள்வரை, இந்த ஆபிரகாம், ஈசாக்கைத் தனக்கென்று சொந்தம் பாராட்டும் ஆவியோடுதான் பற்றிக்கொண்டிருந்தான்! ஆனால், தன் மகனை பலிபீடத்தில் கிடத்தி, தேவனுக்குக் கொடுத்துவிட்ட பிறகோ, அவன் ஈசாக்கை மீண்டுமாய் தனக்கென்று சொந்தம் பாராட்ட முடியவில்லை!

> "**தேவனோ இந்த ஈசாக்கை மீண்டுமாய் ஆபிரகாமிடமே தந்துவிட்டார்! அவனை ஆபிரகாம் தன் வீட்டில் மீண்டுமாய் வைத்துக்கொண்டான் என்பது உண்மைதான்! ஆனால், அவனை தனக்குச் சொந்தமாய் இப்போது பற்றிக்கொண்டிருக்கவில்லை!**

*ஆபிரகாம் கொண்டிருந்த இதே சிந்தைதான், நமக்கும் இவ்வுலகத்திலுள்ள பொருட்களின்மீது இருந்திட வேண்டும். அவைகளை வைத்துக்கொண்டு உபயோகம் செய்யலாம்.... ஆனால், அவைகளில் ஒன்றையாகிலும் நாம் பற்றிக்கொண்டிருக்கக்கூடாது! 'நமக்குச் சொந்தமான' ஒவ்வொன்றும் பலிபீடத்தில் வைக்கப்பட்டு, தேவனுக்கே முழுமையாய் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.* **ஒன்றையாகிலும் நாம் பற்றிக்கொண்டிருக்கக்கூடாது!** *முற்றிலும் ஒப்புவித்துவிட்ட பலிபீடத்திலிருந்து, எவைகளைத் தேவன் நமக்குத் திரும்பக் கொடுத்தாரோ, அவைகளை மாத்திரமே நாம் வைத்துக்கொள்ள முடியும்! அதையும், கர்த்தருடைய சித்தத்தின்படி பயன்படுத்தும் பொறுப்பில்தான், நாம் வைத்திருக்க வேண்டும். அப்போது மாத்திரமே, நாம் தேவனை நெருங்கிச் சேர்ந்து, மெய்யாகவே, அவரைத் தொழுதுகொள்ள முடியும்! இதுவே, கிறிஸ்துவின் மகிமையான வாழ்விற்குள் நம்மை நடத்தும் பாதையாய் இருக்கிறது!*

> "**ஆகவேதான், நாம் திரும்பத்திரும்ப மோரியா மலைக்கு ஏறிச் சென்று நமக்குரிய யாவற்றையும் மீண்டும் மீண்டுமாய் பலிபீடத்தில் கிடத்த வேண்டியது நமக்கு அவசியமாயிருக்கிறது!**

*ஏனெனில், நம்மை முழுவதும் மனப்பூர்வமாய் ஈந்து தேவனுக்குச் செய்திடும் அர்ப்பணத்தில்தான், பரிசுத்தாவியின் நிறைவை நாம் பெற்றிட முடியும்!*

*நாம் தேவனை கனம் செய்தால், தேவனும் நம்மை நிச்சயமாய் கனம் செய்வார்! ஆபிரகாமின் அடிச்சுவடுகளை, ஈசாக்கு பின்பற்றியதைப் போலவே, நம் பிள்ளைகளும் தேவனைப் பின்பற்றிச் செல்லும் பாக்கியத்தை நாம் கண்டிட முடியும்! பலிபீடத்தில் மனப்பூர்வமாய் கட்டப்பட்டு,* **வெட்டப்படுவதற்கு ஈசாக்கு அளித்த ஆயத்தம்,** *தன் தகப்பனுடைய தேவன்மீது அவனும் பக்தியாயிருந்ததை, வெளிப்படுத்தி காட்டி விட்டதே!*

*தேவனுடைய விருப்பம் எதுவாயிருந்தாலும் அதற்கு அடங்கிச் சென்றிட ஆபிரகாம் ஆயத்தம் கொண்டவனாய் விளங்கினான்! ஆம், ஆபிரகாம் எவ்வளவு தேவபக்தி கொண்டிருந்தானோ, 'அதே அளவு தேவபக்தியை' ஈசாக்கும் கொண்டவனாயிருந்தான்! அது, தேவன் தன் தாசனாகிய ஆபிரகாமை கனப்படுத்தி, நிறைவேற்றிய மேலான பாக்கியமாகும்!*

*என்ன விலைக்கிரயமானாலும், எதையும் தேவனுக்கு ஒளித்து வைக்காமல் தந்துவிட்ட ஆபிரகாமின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோர் யாவருக்கும், பூலோகத்திலும் பரலோகத்திலும் மிகப்பெரும் பிரதிபலன் அவர்களுக்கு வைத்து வைக்கப்பட்டிருக்கிறது!*

*- A.W.டோசர்*

---

## தன் போக்கில் செல்பவன் 'சரீரமான சபைக்குரியவன்' அல்ல!

*இணைந்து குடும்பமாய் கட்டப்படும் சபையில் இருங்கள்*

'**நா**ம் தேவனுடைய வீடாயிருக்கிறோம்!' அதாவது, **கட்டப்படும் வீடாகவே சபை திகழும்!** அவ்வாறு கட்டப்படும் 'தேவனுடைய வீட்டில்' நீங்கள் தனித்திருக்க முடியாது. வேதம் கூறுகிறபடி, அவ்வாறு தனித்திருப்பவர்கள், தேவனுடைய வீட்டின் திரளான செல்வங்களை இழந்திடும் அபாயம் உண்டு! ஒருவேளை, சபைக்குள் புதிய விசுவாசிகளாய் வந்தவர்கள், இதன் முக்கியத்துவம் தெரியாமல் இருக்கலாம். ஆனால், நாட்கள் செல்லச்செல்ல 'நீங்கள் இணைந்து கட்டப்பட வேண்டிய அவசியத்தை' அறிந்து கொள்வீர்கள்.

உண்மை என்னவென்றால், நீங்கள் கர்த்தரை விசுவாசிக்கத் தொடங்கியவுடன் 'இயற்கையாகவே' தேவனுடைய பிள்ளைகளைச் சந்தித்து ஐக்கியப்பட உங்களுக்கு ஆர்வம் உண்டாகி விடும். ஏனெனில் "நாம் ஒரே சரீரமாய்.... அந்த ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவே இருக்கிறது! அந்தப் பிரகாரமாகவே கிறிஸ்துவும் இருக்கிறார்" என வாசிக்கிறோம் (1கொரிந்தியர் 12:12; எபே 4:4). ஆகவே, வேதவாக்கியங்கள் நமக்கு

*தெளிவாய் காட்டுகிறபடி, கிறிஸ்துவின் விசுவாசியாக மாறிய ஒருவன் 'தனித்து நிற்பது' முற்றிலும் கூடாத காரியமேயாகும்!*

> **"மாம்சத்தின்படி குடும்பத்தில் பிறந்த ஒருவன், தனக்கு முன்னிருந்த உடன் சகோதரர்களையும், சகோதரிகளையும் புறக்கணித்து விட்டு 'அந்த வீட்டிற்கு, தான் ஒருவன் மாத்திரமே பிள்ளை' என தன் தகப்பனை மாத்திரமே அண்டிக்கொண்டு வாழ்ந்தால், அந்த உறவு விநோதமாய் இருக்கும் அல்லவா?**

*பேதுரு 'ஜீவ கல்லாயிருக்கிறான்' என ஒரே கல்லாய் கூறப்பட்டது எப்போது? (மத்.16:18). அவர் மற்றவர்களோடு இணைந்து கட்டப்படும் வரை! தேவன் நமக்கு தெளிவாய் காட்டுகிறபடி, இந்த கற்களைவிட மேன்மையாய், நம் சகோதர சகோதரிகளோடு இணைக்கப்படுவதையே ஆச்சரியமாய் சுட்டிக்காட்டுகிறது! அதுஏனென்றால், சத்திய வேதம் எடுத்துரைக்கிறபடி* **'நாம் அனைவரும் ஒரே சரீரமாய் இருக்கிறோம்!'** *ஒரே சரீரத்தில் நீங்கள் ஒரு பயனுள்ள கண்ணாகவோ, கையாகவோ அல்லது வேறு எந்த உறுப்பாகவோ இருக்கமுடியும்! 'கண்' சரீரத்திற்கு மிகவும் உதவியானதுதான், ஆனால் அந்த கண், வீட்டில் தனியாய் இருக்குமென்றால், பிரயோஜனம் ஏதுமில்லை. அதுபோலவே என் கை தனியாய் இராமல், என் தோளோடு இணைக்கப்பட்டிருந்தால், வலிமை கொண்டதாய் இருக்கமுடியும்! ஆனால், அந்த 'கை' அலங்கரிக்கப்பட்ட ஒரு கண்ணாடிப் பெட்டியில் வைத்துவிட்டால், அந்த கையினால் சரீரத்திற்கு ஒரு பிரயோஜனமும் இல்லை!*

*இவ்வாறாக, ஒரு அவயவம் மற்றொரு அவயவத்தோடு கொண்டிருக்கும் உறவு மிக அவசியமாய் இருக்கிறது. இவை யாவும் எடுத்துரைக்கும் அழியாத ஆவிக்குரிய உண்மை என்னவென்றால்:*

> **"தேவனுடைய ஒரு குடும்பத்தைக்கூட சிலர் பலவந்தமாய் சிதறடித்திட முடியும்! தேவனுடைய கட்டிட ஆலயத்தைக்கூட உடைத்து அழித்து விடலாம்! ஆனால் "கிறிஸ்துவின் சரீரத்தை" எந்த வல்லமையும் பிரிக்கவோ அல்லது அழித்திடவோ முடியாது!**

*எப்படியெனில், சரீரத்திலுள்ள ஒரு கையோ அல்லது ஒரு காலோ, இனிமுதற்கொண்டு நாங்கள் தனித்து இயங்கப் போகிறோம், என எத்தனை மூர்க்கமாய் அறிவித்தாலும், அது சுத்த மதியீனம். ஒரு சரீரத்திலுள்ள எல்லா அவயவங்களும் ஒன்றாய் சேர்ந்துதான் வாழமுடியும்! இப்போதுதான் புதிதாய் வந்த இளம் விசுவாசிகளும், அங்குள்ள மற்ற கிறிஸ்தவர்களோடு தங்களுக்கு ஐக்கியம்*

*உண்டு என்பதை உணரும்படிச் செய்ய வேண்டும். பல்லாண்டு சபையிலிருக்கும் விசுவாசி 'தன்னை தனியாக வைத்து' யாரையும் புறக்கணித்து விடவும் கூடாது.* ***தனித்திருக்கும் வாழ்க்கையை*** *சபையிலிருக்கும் ஒருவருக்கும் தேவன் தருவதில்லை!*

நாம் எல்லோருமே 'ஒருவருக்கொருவர் இணைந்தே' வாழ வேண்டும். ஒருவருக்கொருவர் தாழ்மையாய் இருக்கும் ஸ்தானமே, *நம்மை கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில், சிறந்த உதவி ஊழியராய் மாற்றிடமுடியும். இவ்வாறாக, சபையில் புதிதாய் வந்திருக்கும் விசுவாசிகளுக்கு 'அன்பும் ஐக்கியமும்' ஏராளமாய் வழங்கப்படுவதே ஒரு உண்மையான சபையாகும்!*

*அதுபோலவே, அந்த புதிய விசுவாசியும், சபையிலுள்ள எல்லா* தேவனுடைய பிள்ளைகளோடும் இணைந்து வாழ்வதை, தங்களுக்கு கிடைத்த பாக்கியமென்று எண்ண வேண்டும்! *அப்போதுதான், ஒரு விசுவாசியாய் சபையில் பிரவேசித்த அவன் 'ஒரு கிறிஸ்தவனாய்' மறுரூபம் பெற்று, சரீரமான சபையிலுள்ள எல்லோருக்கும் 'பணிவிடை செய்யும் உதவியாளராய்' மாறுவான்!*

**ஒரே சரீரம்** என்பது போலவே, இயேசுவின் சபை "ஒரு ஸ்தல சபையாய்" **அந்தந்த ஸ்தலத்தில் இணைந்து** வாழ்ந்திட வேண்டும்! *ஆரம்ப அப்போஸ்தலர் காலந்தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் வரை "எருசலேமிலுள்ள சபை" (அப்.8:1) என்றும், "கொரிந்துவிலுள்ள தேவனுடைய சபை" என்றும் (1கொரி.1:2; 2கொரி.1:1), "ஆசியாவிலுள்ள ஏழு சபைகள்" என்றும் (வெளி.1:4) கூறப்பட்ட வரிசையாக: எபேசு சபை, சிமிர்னா சபை, பெர்கமு சபை, தியத்தீரா சபை, சர்தை சபை, பிலதெல்பியா சபை, லவோதிக்கேயா சபை (வெளி.2:1-8,12,18; 3:1,7,14) என, வேதாகமத்தில் காணப்படும் சபைகள் யாவும் பழைய ஏற்பாட்டு 'ஏழு குத்துவிளக்கு கிளை கொண்ட' தண்டாய் இல்லாமல், தனித்தனி குத்துவிளக்காய் சபைகளை ஆண்டவர் உருவாக்கினார்! அவ்வாறு அந்த சபைகள் வாழ்ந்ததற்கு ஆவிக்குரிய காரணம், ஒரே ஒரு சாரம்சம்தான்!....*

> "அது என்னவென்றால் "அந்தந்த ஸ்தலத்தை சார்ந்தே" சபைகளை தேவன் உருவாக்கினார். இவ்வாறு 'அந்தந்த ஸ்தலம்' என்பதைத் தவிர, வேறெந்த பிரிவினைக்கும் இடமில்லை! அதாவது, ஒரு நகரமென்று இருந்தால், அங்கே ஒரே ஒரு ஸ்தல சபை வேண்டும்!

***ஆகவே "ஸ்தல சபை"*** *என்ற அடித்தளமே, சபையைக் குறித்து வேதம் தந்த நிலைவரமான அடித்தளமாகும்! ஒரு சிறிய சபையாக*

*இருந்தாலும், அதுவே 'கிறிஸ்துவின் சரீரம்' வளர்ச்சியடையும் ஸ்தல சபையாகும்! ஒரு பெரிய சபையாக இருந்தாலும், அதுவே ஸ்தல சபையாகும்! ஒரு ஸ்தல சபையைவிட, எதையாவது வைத்து பெரிய சபை என அழைத்துக்கொண்டாலும், அதை சபை என அங்கீகரிக்க முடியாது! போட்டிக்கும், பொறாமைக்கும் 'பிரிந்து செல்வோரை' தேவன், சபை என்று அங்கீகரிப்பதில்லை! ஆனால், கொரிந்து சபையிலுள்ள சிலர்: நான் பவுலைச் சேர்ந்தவன் என்றும், நான் அப்பொல்லோவை சேர்ந்தவன் என்றும், நான் கேபாவைச் சேர்ந்தவன் என்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்றும், அங்குள்ளவர்கள் சபையை நான்கு பிரிவாய் வைத்துக் கொண்டார்கள். தனித்தனியானஇவ்விதபிரிவைபவுல்வன்மையாய் கடிந்து கொண்டார்: பவுல் நல்லவர்தான்! அப்பொல்லோ நல்லவர்தான்! கேபா நல்லவர்தான்!..... இருப்பினும், அந்தந்த மனிதர்களைக் கொண்டு சபையை பிரிவினைப்படுத்துவது, எந்த சமயத்திலும் நல்லதல்ல! ஆகவே, அந்தந்த ஸ்தலத்தை ஆதாரமாய் வைத்தே 'ஸ்தல சபை' என்ற தனித்தன்மை கொண்டதாய் இருக்கலாமே அல்லாமல், அந்தந்த அப்போஸ்தலர்களை வைத்து சபைகளைப் பிரித்து வைப்பது தவறு! எனவே அப்போஸ்தலர்களை முன்வைத்து பிரிவினை ஏற்படுத்துவதை "மாம்சத்தின்படியான பிரிவினை" என்றே வேதாகமம் கண்டித்து புத்தி சொல்லுகிறது!*

அதுபோன்ற பிரிவினை, நாளாவட்டத்தில் தனிமனித ஆராதனையாகவே மாறிவிடும்! என்ற எச்சரிக்கையை அறிந்து, நீங்கள் தேவன் அங்கீகரிக்கும் 'ஸ்தல சபையில்' இருக்கிறீர்களா? என்பதை ஆராய்ந்து ஸ்திரப்படுத்திக் கொள்ளுங்கள்! அந்த சபை, கிறிஸ்துவின் சரீரமாய், அவரை தலையாகக் கொண்டு கட்டப்படுமென்றால், பாதாளத்தின் வாசல்களும், அப்படிப்பட்ட "ஸ்தல சபையை" மேற்கொள்ள முடியாது!

*- வாட்ச்மென் நீ*

---

## பரிசுத்தாவி அபிஷேகம் பெற்றுக் கொண்டீர்களா?

*அபிஷேகத்தை 'அதிக நிச்சயமாய்' வழங்கும் நம் பிதா*

ஒரு அம்மாள், பரிசுத்த ஆவி அபிஷேகத்திற்காக அதிக வாஞ்சையோடு பல காலமாய் ஜெபித்துக்கொண்டுவந்தும், அவரைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஒருநாள் இரவில், வெகு நேரம் தேவனுக்கு முன்பாக தாழ்த்தி, ஜெபித்துக்கொண்டிருந்தபோது 'ஒரு காரியம்' அவர்களுக்கு ஞாபகத்துக்கு வந்தது. அது பெரிய பாவமல்ல, ஒரு சிறு

*ஆபரணமே! அது, அந்த அம்மாளுக்கு ஒரு விக்கிரகம்போலிருந்ததால், தான் கர்த்தரைப் பார்க்கிலும் அதிகமாய் நேசித்துவந்த ஆபரணத்தை முழங்காலில் நின்ற இடத்திலேயே எடுத்துப்போட்டவுடன், ஆவியானவரின் நிறைவைப் பெற்றுக்கொண்டதாக மிஷனெரி சார்லஸ் பின்னி பிரசங்கியார் சொன்னார்!*

*நாம் ஆவியினால் நிரப்பப்பட வேண்டுமானால், தேவன் காட்டுகிற தடையெதுவோ அது உணவிலோ, உடையிலோ, நகையிலோ, நடக்கையிலோ அதை உடனே விட்டுவிட ஆயத்தமாயிருக்க வேண்டும். மற்றவர்களுடைய விஷயத்தில் குற்றமாயிராதது, நமக்குக் குற்றமாயிருக்கலாம். கானான் தேசத்தில் பஞ்சமுண்டானால்* ***அங்குள்ள மனுஷர் எகிப்து தேசத்திற்குப்போவது குற்றமல்ல. ஆனால் ஆபிரகாம் எகிப்துக்குப் போனதுதான் குற்றம்!*** *அவர் தேவனுடைய மனுஷன், தேவனால் பிரிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டு வந்தவர். பஞ்சத்திலும் கர்த்தரை நம்ப வேண்டியவர்! மேலும், தேவன் அவருக்குப் பெரிய ஆசீர்வாதத்தை வாக்குப்பண்ணியிருந்தார்! அவரோ மற்றவர்களோடு சேர்ந்து எகிப்துக்குப் போனதினால் தேவசமூகத்தை இழந்து, அதிக தொல்லைக்கும் நிந்தைக்கும் ஆளானார். மற்றவர்களுக்கு குற்றமில்லாதது ஆபிரகாமுக்கு குற்றமாயிற்று! நாம் உண்மையாகவே ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், அது பாவமா? இது பாவமா? அப்படிச் செய்தாலென்ன? இப்படிச் செய்தால் என்ன? இதிலேயெல்லாம் என்ன குற்றமிருக்கிறது என்று பேசமாட்டோம்!*

> “நம்முடைய ஜீவியத்தில் தேவன் எதைத் தடையாகக் காண்பிக்கிறாரோ, அது எதுவானாலும் சரி, அவருடைய கடிந்துகொள்ளுதலுக்கு உடனே திரும்புவோமாக! அப்பொழுது ஆவியானவர் நமக்கு அருளப்படுவாரென்பது நிச்சயம்.

**மே**லும், நமது சொந்த நற்குண தகுதியின்படி, பரிசுத்தாவியைப் பெற்றுவிடலாம் என்றெண்ணி, திரளான கிறிஸ்தவர்கள் “பரிசுத்தாவியின் அபிஷேகத்தை” பல வருடங்களாகியும் பெறாமலே இருக்கிறார்கள்! பரிசுத்தாவி அபிஷேகம் பெறுவது “விசுவாசத்தின் ஆதாரமே” அல்லாமல் ‘உங்கள் நற்குண ஆதாரம்’ அல்ல! ஏனெனில் பரிசுத்தாவியின் மூலமாகவே, நாம் பரிசுத்தத்தையும், பரத்திலிருந்து உண்டாகும் ‘பூரண சற்குணத்தையும்’ பெறுகிறோம்! *கொர்நேலியுவின்* விஷயத்திலும் இது மெய்யாயிருக்கிறது. அவன் தேவ பக்தனும், தேவனுக்குப் பயந்தவனும், மிகுந்த தர்மங்களைச் செய்தவனும்,

*தேவனை நோக்கி எப்பொழுதும் ஜெபம் பண்ணினவனுமாயிருந்தான். தேவன் அவனிடத்தில் மிகவும் பிரியமாயிருந்தார்!*

> **"ஆகிலும், கொர்நேலியு தன்னுடைய நற்கிரியைகளினாலே பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை! *பேதுரு மூலமாய்,* தேவனிடம் விசுவாசம் வைத்த நிமிஷத்தில், ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்!**

*நாம் நற்கிரியைகளைச் செய்ய வேண்டியதுதான். ஆனால் நம்முடைய ஜெப தியானங்களிலும், நாம் செய்துவரும் நற்கிரியைகளிலும் நம்பிக்கை வைப்போமானால், ஒருபோதும் தேவாவியானவரைப் பெற்றுக்கொள்ள மாட்டோம். நமது சகல பாவங்களைச் சுமந்தவரும், நமக்காகச் சிலுவையில் அறையுண்டு தொங்கினவருமான நமது இரட்சகரையே ஆவலோடு நோக்கிப் பார்க்க வேண்டும்! அவரை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, பணிவோடு அவரை நமஸ்காரம் செய்யவேண்டும்! இவ்விதமாய் நாம் கிறிஸ்துவை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அவரை நோக்கி "விசுவாசத்தோடு" வேண்டும்போது, பரிசுத்த ஆவியானவர் அளவில்லாமல் நமக்கு அருளப்படுவார்! "என்னிடத்தில்* **விசுவாசமாயிருக்கிறவன் எவனோ,** *அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்றார். "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்" (யோவான் 7:38,39) என்றே வாசிக்கிறோம்!*

**மே***லும் தாகம் கொண்டவர்களுக்குத்தான், ஆவியானவர் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறார்:"தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்" என்கிறார் (ஏசாயா 44:3).*

> **"தாகமுள்ளவனைத்தான் கிறிஸ்துவானவரும் தம்மிடத்தில் அழைக்கிறார். "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்" என்கிறார் (யோவான் 7:37).**

*அதுபோலவே, தாகமுள்ளவனைத்தான் 'ஆவியானவரும்' அழைக்கிறார். "தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் (வாஞ்சையுள்ளவன்) ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்" என்கிறார் (வெளி.22:17). நாம் அநேகந்தரம் 'ஆவியைத்தாருமென்று' ஜெபித்திருக்கிறோமே! நீங்கள் ஏன் நிரப்பப்படவில்லை? உங்களுக்கு பரிசுத்தாவியைப் பெற வேண்டுமென்ற தீராத தாகம் இருந்ததா? என்றே சோதித்துப் பாருங்கள்!*

*நீங்கள் தேவனுக்கு முன்பாக, உங்களை வேத வசனத்தின்படி சரி செய்தபிறகு "உங்கள் பிதாவிடம்" கேட்டுக்கொள்ளும்போது, பரிசுத்தாவியானவரை நீங்கள் "அதிக நிச்சயமாய்" பெற்றுக்கொள்வீர்க ளென்றே, இயேசு வாக்களித்துள்ளார்!*

*- S. பரமானந்தம்*

---

## அவரது கரத்தின் நிழலில் மறைந்திருக்கும் தாசர்கள்!

*கர்த்தர் பயன்படுத்துவதை மாத்திரம் விரும்புங்கள்*

*இயேசு கூறும்போது, "நானும், என் பிதாவும் ஒன்றா யிருக்கிறோம்" என்ற தேவனோடு கொண்ட ஐக்கியத்தின் அறிவிப்பை, பலமுறை தன் சீஷர்களுக்கு கூறியிருக்கிறார். ஆகவே 'நாம் கிறிஸ்துவை அறிந்த' விசுவாசிகளாய் இருந்தால் 'சர்வ வல்ல தேவனையும்' அறிந்தவர்களாய் இருப்போம்! இந்த வெளிச்சத்தில், ஏசாயா 51:16 கூறும், "**என் கரத்தின்** நிழலினால் உன்னை மறைக்கிறேன்" என்ற வசனம் நம் இருதயத்தை பரவசப்படுத்துகிறதல்லவா! அது ஏனென்றால், நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால் சர்வ வல்ல **தேவனுடைய கரத்தின்** அரவணைப்பு நமக்குச் சொந்தமாய் மாறுகிறது!*

> **"ஒரு கிறிஸ்தவ விசுவாசிக்கும், ஒரு கிறிஸ்துவின் ஊழியனுக்கும் "அவர் கரத்தின் நிழலின் பாதுகாப்பு" இந்த பூமியில் நமக்குரிய ஜீவிய நோக்கத்தையும், ஊழிய நோக்கத்தையும் நிறைவேற்றி முடிப்பதற்கு மிகுந்த ஆதரவாய் இருக்கிறது!**

*ஏசாயா 51:16 கூறுகிறபடி, கர்த்தருடைய கரத்தில் நாம் அடங்கியிராமல் ஊழியம் செய்து கொண்டு, 'தேவ ஊழியன்' என ஒருவன் தன்னை சொல்லிக் கொள்வது எப்படி? ஒரு பராக்கிரமசாலியின் கரத்தில் இல்லாத எந்த ஒரு ஆயுதமும், யாதொரு வலிமையான செயலையும் செய்திட இயலாது. அந்த ஆயுதம், பராக்கிரமசாலியான கர்த்தரின் கையிலுள்ள அம்புகளாய் இருக்கவேண்டும். 'அதை' அவரே சத்துருக்கள் மீது எய்து அழிக்க வல்லவர்! ஏனெனில் அவரது கரத்தின் வல்லமை மகா மேன்மையானதாகும்! நாமோ, அவருடைய ஆயுதமாய் இருக்கும் **எளிமையான அம்புகள்** மாத்திரமே! நம்மையோ அவர், தனது கரத்தின் நிழலின் மறைவில் வைத்திருக்கிறார். கர்த்தர் அந்த அம்புகளைத் தொடுத்து வீசும் வரைக்கும், அந்த அம்புகள் **'காணப்படாத' ஆயுதமாய்** இருக்கிறது. அவருடைய மெய்யான ஊழியர்களாய் இருக்கும் யாவரும் 'தேவன் அவர்களைப் பயன்படுத்தும் நேரம்வரை'*

*கர்த்தருடைய கரத்தில் மறைந்தே வாழ வேண்டும்! ஏசாயா 49:2-வசனம் "....என்னை மறைத்து, என்னைத் துலக்கமான அம்பாக்கி, தமது அம்பறாத்தூணியிலே மூடிவைத்தார்" என நேர்த்தியாய் விவரிக்கும் வசனத்தைப் பாருங்கள்!*

கர்த்தர் நம்மை வல்லமையாய் பயன்படுத்தும் நேரத்தில் 'எல்லோராலும் நாம் காணப்படுவோம்' என்பது உண்மைதான்! ஆனால், நம்முடைய முழு இருதயமான இலக்கோ, பிறரால் நாம் காணப்படாமல் இருப்பதுதான்! இருப்பினும், நாம் வல்லமையாய் பயன்படுத்தப்படும் நேரத்தில் பிரதான அப்போஸ்தலனாகிய பவுலைப் போலவே "**நான் ஒன்றுமில்லை! என்றாலும் ... (2கொரி 12:11) உங்களால் மெச்சிக் கொள்ளப்பட வேண்டியதாயிருந்ததே!**" என, அறிக்கை செய்வதற்கே நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நம்முடைய விருப்பமெல்லாம், கிறிஸ்து மகிமைப்பட வேண்டும், நம் சுயமோ மறைக்கப்பட வேண்டும்! என்பதாகவே எப்போதும் இருந்திட வேண்டும்:

> "
> **ஆனால், வருத்தம் என்னவென்றால், நாம் செய்கின்ற எந்தக் காரியத்திலும் கிறிஸ்துவை உயர்த்துவதற்குப் பதிலாய், நம் சுயத்தை மார்தட்டிக்கொள்ளும் குழியில் விழுகிறோம்!**

உதாரணமாய், ஒரு ஏழைப் பெண்மணிக்கு ஏதாகிலும் உதவி செய்திடச் செல்லும் ஒருவன் 'ஒரு பெரிய தயாளம் செய்வதாக' ஆணவம் கொண்டிருப்பது சரிதானா? இந்த ஆணவத்தோடு நீங்கள் எவ்வளவு உதவிகள் செய்திருந்தாலும், அந்த ஏழைப் பெண்ணின் கண்களில் 'இழிவான ஜனத்திற்கு அருள் பாலிக்க வந்த மகானாக' நீங்கள் இருந்ததைத்தான் கண்டார்கள்! இதே செயலை, தெய்வீகமாக நாம் செயல்படுத்த வேண்டுமென்றால், அந்த ஏழைப்பெண், "ஒரு நேசமுள்ள சகோதரன் அல்லது நேசமுள்ள ஒரு சகோதரி மனஉருக்கத்தோடு அந்த ஏழைப் பெண்ணிற்கு உதவி செய்து, மகிழ்ச்சி கொண்டு வந்ததை" மாத்திரமே அவள் அறிந்திருக்க வேண்டும்!

பிரசங்கிப்பவர்களில் அநேகர் தங்கள் வேதஅறிவையும், திறமையையும் காட்டும் நோக்கத்தில் பிரசங்கிக்கிறார்கள்! ஆனால் இயேசுகிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியனோ, கர்த்தரையே முழுமையாய் சார்ந்து கொண்டு! தன் எஜமானின் புகழுக்காகவே ஊழியம் செய்து! மிக ஆச்சரியமான ஆசீர்வாதங்களை ஜனங்களுக்கு கொடுத்து வருவான்! இவ்வாறாக, நாம் என்றென்றும் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் பாதையை மாத்திரமே தெரிந்துகொள்ளக்கடவோம்.

*தேவனுடைய கரங்களுக்குள் மாத்திரமே* **நமது பாதுகாப்பும்,** *அங்கீகாரமும் இருக்கிறது! அதுபோலவே, அவரது கரத்தின் நிழல்* **நமது மறைவான ஒளிப்பிடமாயும்** *இருக்கிறது. அவருடைய ஒளிப்பிடமான கரத்தில் இருக்கும்வரை, கர்த்தர் தொடர்ந்து நிச்சயமாய் உங்களைத் தனது பெரிய செயல்களுக்கும் பயன்படுத்துவார். மெய்யாகவே கர்த்தர் அருளிய வாக்கின்படி "நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி, என் கரத்தின் நிழலினால் உன்னை மறைத்துக்கொள்வேன்" என்ற ஆசீர்வாதம் (ஏசாயா 51:16), அவரது தாசர்கள் அனைவருக்கும் உண்டாவதாக! அபிஷேகிக்கப்பட்ட அவரது வார்த்தைகள், தமது தாசர்களின் நாவில் என்றென்றும் தங்கியிருப்பதாக. ஆமென்!*

*- C.H.ஸ்பர்ஜன்*

---

## 'பிறருக்காக நாம் ஜெபிப்பதை' கர்த்தர் ஆர்வமுடன் கேட்கிறார்!

*'மற்றவர்களுக்காக' என்ற வளர்ச்சி வேண்டும்*

'ஜெபத்திற்கு தேவன் விடைகொடுத்தார்' என்றவுடன், அநேகருக்கு மனதில் தோன்றுவதெல்லாம், அற்புதமாய் விடை தந்தார்! ஆச்சரியமாய் விடை கொடுத்தார்! என்றெல்லாம் சொல்லிக்கொள்வதற்கு ஆசைப்படுவார்கள். ஆனால், தேவன் நமக்குப் போதிக்க விரும்பும் ஜெபமோ இயற்கையானது!

**" எப்படியெனில், நாம் தேவனிடம் கேட்டு ஜெபிப்பது எவ்வளவு இயற்கையாய் இருக்கிறதோ, அவ்வளவாய் தேவன் நம் ஜெபத்திற்கு பதிலளிப்பதும் இயற்கையாகவே இருக்கிறது!**

*ஒருவன் தன் இருதயத்திலிருந்து ஜெபிக்கும் வேண்டுதலையே கர்த்தர் மகிழ்ச்சியோடு கேட்கிறார். அதுபோலவே நம் ஜெபத்திற்கு பதில் தருவதும் அவருக்கு மகிழ்ச்சியாகவே இருக்கிறது. ஒரு கோடீஸ்வர பிரபு, ஏழை மக்களுக்கு உணவு வழங்குகிறார் என்றோ, அல்லது ஒரு மிஷனெரி ஸ்தாபனத்திற்கு அந்த கோடீஸ்வர பிரபு பொருளுதவி தந்து ஆதரிக்கிறார் என்றோ, நாம் கேள்விப்படும்போது "அடடே, இப்படி அவர் செய்வது மிகவும் அருமை!" என நாம் இயற்கையாகவே ஏற்றுக்கொள்கிறோம்!*

அதுபோலவே, தேவன் நம்மை நேசிப்பது எவ்வளவு உண்மையாய் இருக்கிறது என்பதை நாம் மனப்பூர்வமாய் அறிந்திருந்தால் மாத்திரமே, நம் தேவன் நாம் கேட்டுக் கொண்டதை தருவதும் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் என்பதை நிச்சயமாய் அறிந்திருப்போம். இவ்விதமாய், தேவன் நமக்கு பதிலளித்த முதலாவது

ஜெபம், பின்பு இரண்டாவது ஜெபம் என நீங்கள் அனுபவிக்கும் போது, அடுத்த சூழ்நிலையில், நீங்கள் நிச்சயமாய் வேதம் கூறுகிறபடி "கிருபாசனத்தண்டை செல்வதற்கு மிகுந்த தைரியம்" பெற்று விடுவீர்கள்! (எபி 4:16).

தேவன் நிச்சயமாய் பதில் தருவார் என்ற ஜெபத்திற்கு, ஒரு 'முன் ருசியை' உங்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்: "**இரட்சிக்கப்படும்படி நாம் யாருக்கெல்லாம் ஜெபித்தோமோ,** அதை தேவன் கேட்டு, அவர்களை விரைந்து வந்து இரட்சித்து விடுவார்!" என்ற உண்மையை அறிந்து கொள்வோமாக! இதை நீங்கள் மனப்பூர்வமாய் விசுவாசித்து 'பிறருக்காய்' ஜெபித்துப்பாருங்கள். கர்த்தர் செயல்படுத்தும் இரட்சிப்பை நீங்கள் கண்கூடாக காண்பீர்கள்!

ஒருநாள், என்னோடு வாக்கிங் வரும் பாதிரியார் நண்பர் "லண்டன் பட்டணத்திலுள்ள புனித மாற்கு சபையை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார். அதற்கு நான் "நன்றாகத் தெரியும், அந்த ஆலயத்திற்கு நான் பலமுறை சென்றிருக்கிறேன்" எனக் கூறியவுடன், ஒரு நிகழ்ச்சியை எனக்கு அவர் விவரித்தார்: "ஸ்தல சபையின் ஊழியராய் இருந்த நான் ஜெபக்கூட்டம் முடித்து வெளியே வந்தபோது, என்னிடம் 'கோயில்குட்டி' என அழைக்கப்படும் சபையில் உதவி செய்யும் பணியாளர், என்னிடம் "ஐயா, என் மகனுக்காக நீங்கள் தயவுசெய்து ஜெபம் செய்ய வேண்டும். அவனுக்கு இப்போது 22-வயதாகிவிட்டது. அவனோ பல வருடங்களாய் ஆலயத்திற்கு வருவதில்லை. அவனை ஆலயத்திற்கு கர்த்தர் கொண்டு வரும்படி தயவுசெய்து ஜெபியுங்கள்" எனக் கேட்டார்.

அதற்கு, அந்த ஸ்தலசபை பாதிரியாராகிய நான் "வாருங்கள், நம் இருவரும் சேர்ந்து 5-நிமிடம் ஜெபிப்போம்" எனக்கூறி நாங்கள் முழங்காலிட்டு 'மகனுக்காக' ஜெபித்தோம். இவ்வாறு நாங்கள் ஜெபித்த செயல், அவருடைய மகனுக்கு தெரியாது. ஆகிலும், அன்று மாலை நடந்த ஜெபக்கூட்டத்திற்கு கோயில்குட்டியின் மகன் வந்துவிட்டான்! அந்த நேரத்தில் பிரசங்கிக்கப்பட்ட சில வார்த்தைகள் அவனுடைய பாவத்தை கண்டித்து உணர்த்தியது. அவன் மிகவும் நொருங்குண்ட இருதயத்தோடு, இயேசுகிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டான்!

ஆலய உதவியாளராய் இருந்த கோயில்குட்டி "ஐயா, நேற்று இரவு என் மகன் ஆண்டவரிடம் வந்து, மனம் மாறிய சம்பவம்....

"

**இனி ஒருவரையும் மோசமானவன் என எண்ணாமல், அவர்களுக்காக**

**ஜெபிக்க வேண்டும் என்ற சவாலை என் உள்ளத்தில் பெற்றேன்" என மகிழ்வுடன் கூறினார்.**

"மேலும், இப்போது அதுபோலவே, சபைக்கு வராதிருக்கும் சகோதரர் *ராபர்ட்* அவர்கள், மகா மோசமான குடிகாரனாயிருக்கும் கொடிய பழக்கத்திலிருந்து விடுதலைபெற நாம் சேர்ந்து ஜெபிக்கலாமா?" என வேண்டிக்கொண்டார். இருவரும் முழங்காலிட்டு, அந்த குடிகார சகோதரன் மனமாற்றம் அடைய வேண்டுமென்று ஒருமனப்பட்டு ஜெபித்தோம். நடந்தது என்ன? அதே வார இறுதியில் நடந்த ஜெபக்கூட்ட நேரத்தில், **'யாருக்காக ஜெபித்தார்களோ'** அந்த குடிகாரன், தள்ளாடி தள்ளாடி அந்த மீட்டிங் ஹால் கதவை தள்ளிக்கொண்டு, உள்ளே நுழைந்து, தன் தொப்பியை கழற்றி வைத்துவிட்டு நாற்காலியின் அருகில் தன் முகத்தை மூடி, தேம்பித் தேம்பி பாவஉணர்வு தாங்கமுடியாமல் அழுதான். குடிபோதையில் கண்ணீருடன் உணர்வடைந்த அந்த சகோதரன், இரட்சிக்கப்பட்டார்!

ஒரு பாவி மனம் திரும்பும்படி ஜெபித்திடும் ஜெபத்திற்கு எத்தனை வல்லமை இருக்கிறது என்பதை அறிந்தீர்களா? இனி முதல், நாம் ஏன் குணப்படாத நண்பர்களுக்காக, உறவினர்களுக்காக, வீட்டாருக்காக ஜெபிக்க கூடாது?

**"ஒரு நபர் மனந்திரும்பி குணப்படும்படி நாம் எவ்வளவுதான் முயற்சி செய்து பேசினாலும், அதை அந்த நபர் உதாசினம் செய்திட முடியும்! ஆனால், அந்த நபருக்காக நாம் ஜெபிப்பதை அந்த நபர் தடைசெய்யவோ, உதாசினப்படுத்தவோ முடியாது!**

*இனிமுதற்கொண்டு நீங்கள் பாரம் கொண்ட மோசமான நபர்கள், இரட்சிக்கப்படும்படி நீங்கள் தனியாகவோ அல்லது இரண்டு அல்லது மூன்று பேராவது சேர்ந்து ஜெபிப்பீர்களாக! அப்போது, நிச்சயமாய் தேவனுடைய இரட்சிப்பின் வல்ல செயலை காண்பீர்கள். நீங்கள் செல்லுமிடமெல்லாம் தேவனை அறிமுகப்படுத்தி கூறுங்கள், பின்பு தேவனை நம்பியிருங்கள்! அப்போது தேவன் ஆச்சரியமான கிரியை நடப்பித்து, நம்மால் விளங்கிக்கொள்ள முடியாத அற்புதங்களை செய்து முடிப்பார்!*

ஒருமுறை, *'டான் கிராபோர்ட்'* (Dan Crawford) என்ற தேவதாசன் கூறும்போது, " நாங்கள் ஊழிய பணிமுடித்து வேகமாய் வீடு திரும்பிக் கொண்டிருந்தோம். அப்போது நாங்கள் கடக்க வேண்டிய ஆற்றில் 'காட்டாற்று வெள்ளம்' கரைபுரண்டு ஓடியது. சிலராக இருந்த

*நாங்கள், கைகோர்த்து ஜெபிக்கத் தொடங்கினோம். அச்சமயம், அந்த வழியாகச் சென்ற சில நபர்கள், எங்கள் ஜெபத்தைக் கேட்டு, சத்தமாய் சிரித்தார்கள்... "இது என்ன ஜெபம்? உங்கள் தேவன், உங்களை தூக்கிக்கொண்டு காட்டாற்று வெள்ளத்தின் கரை சேர்ப்பாரோ?" என ஏளனம் செய்தார்கள். அதே நேரத்தில், கரையோரமாய் இருந்த ஒரு பெரியமரம், ஆற்றின் குறுக்கே முறிந்து விழுந்தது. கர்த்தருடைய ஊழியர்களாகிய எங்களுக்கு* **ஒரு மர பாலத்தை** *ஏற்படுத்தித் தந்த "ராஜரீக என்ஜினியரான தேவனுக்கு" நன்றி கூறி அக்கரை சேர்ந்தோம்! எங்கள் ஜெபத்தைக் கேட்டு நகைத்த அந்த சிறுகூட்டத்தார் 'பயத்தோடும் திகைப்போடும்' பார்த்துக் கொண்டிருந்ததை அக்கரை சேர்ந்துவிட்ட நாங்கள் கண்டோம்! ஜெபம் கேட்ட கர்த்தரை ஸ்தோத்தரித்தோம்!*

*இவ்வாறு, ஜெபத்திற்கு கிடைத்த அற்புதங்கள் ஏராளமுண்டு. இந்த நாகரீக காலத்தில் ஜெபத்தை உதாசினப்படுத்தும் வாலிபர்களுக்கு சத்தியவேதம் சொல்வது என்னவென்றால், ஆதியாகமம் 21:17-ம் வசனம் கூறுகிறபடி:* "**தேவன், பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்**". *ஆகாரே, உன் பிள்ளையின் சத்தத்தை நான் கேட்டேன் என ஆணித்தரமாய் கூறிய தேவன், உங்கள் வாழ்வின் கன்மலையாய் மாறுவாராக! 'ஜெபம்' உங்கள் ஜீவியத்தின் மிகுந்த ஆஸ்தியாய் மாறி, உங்கள் ஜீவியத்தின் அன்றாட அனுபவமாய் மாறிட கிருபை செய்வாராக, ஆமென்!*

*- Kneeling Christian*

---

## மனுஷீகம் ஒழிந்து, தெய்வீகம் மலரட்டும்!

*மனுஷீக நியாயத்தில் வஞ்சனை உண்டு*

தொழுநோய் *சீமோன் வீட்டில் இயேசு அமர்ந்திருந்தபோது, ஒரு பெண் விலையுயர்ந்த பரிமளத்தைலம் கொண்ட 'படிகசிமிளை' உடைத்து, அவருடைய தலையில் ஊற்றினாள்! அப்போது அங்கிருந்த மக்களில் தலைமை குருக்களும், வேத அறிஞர்களும் உட்பட, மிகவும் சினம் கொண்டு "தைலத்தை* **வீணாக்குவானேன்?** *இதை 300-வெள்ளிக்காசிற்கும் மேலாக* **ஏழைகளுக்கு கொடுத்திருக்கலாமே!**" *என்று கூறி அவளிடம் சீறிப் பாய்ந்தனர்! (மாற்கு 14:1-5).*

> "இந்த நிகழ்ச்சியை மாத்திரமே பெரிதாக்கிப் பார்த்தால், அவர்கள் சினந்து கூறியது நியாயம் என்றே தென்படும்! 1) 'வீணாக்கக் கூடாது' என்பது நியாயம்! 2) 'ஏழைகளுக்கு கொடுப்பது' நியாயம்! இவ்வித நியாயத்திற்கு அப்பால், அந்தப் பெண் செய்த செயலை "இவள் எனக்குச் செய்தது நேர்த்தியான செயல்!" என்றல்லவோ இயேசு உடனே கூறிவிட்டார்! (வச.6).

*இங்குதான், மிக முக்கிய வேறுபாடு ஒன்றைக் காண்கிறோம்! 'வீணாக்கக் கூடாது! ஏழைகளுக்கு கொடுத்திருக்கலாம்!' போன்ற மனுஷீக நியாயத்தை 'இந்த சம்பவத்தில்' இயேசு புறம்பாக்கிப் போட்டார்! மாறாக, அவளுடைய செயலில் காணப்பட்ட தெய்வீக அன்பையும், தெய்வீக விசுவாசத்தையுமே இயேசு போற்றினார்! ஆம், அவர்கள் வாதாடியது 'மனுஷீகம்!' இயேசு சுட்டிக்காட்டிய ஜீவியமோ 'தெய்வீகம்!'*

ஒருமுறை, பேதுரு இயேசுவைப் பார்த்து "நீர் சிலுவை எடுத்து கஷ்டப்படவே கூடாது!" எனக்கூறியது மனுஷீகம். அந்த மனுஷீக அன்பின் பிணைப்பை, இயேசு எப்படி தன் சீஷனிடமிருந்து அகற்றினார்? "அப்பாலே போ சாத்தானே, நீ தேவனுக்கானவைகளைத் தேடாமல், மனுஷனுக்கானவைகளைத் தேடினாய்" என ஆழமாய் கடிந்து கொண்டதால், பேதுரு 'மனுஷீகம் நீங்கி' குணப்பட்டான்! (மத்.16:23). ஆம் 'மனுஷர்களுக்கு முன்பாய் வாழ்ந்து' தங்களை நீதிமானாய் காட்டிக்கொண்டு 'ஓர் போலியான பரிசுத்தம் நாடிய' பரிசேயரை இயேசு புறக்கணித்து, அவ்வித ஜீவியம் 'தேவனுக்கு முன்பாக' அருவருப்பு! என கூறியதை மனதில் கொள்வோமாக! (லூக்கா 16:15).

வேதபாரகர்கள், ஜனங்களிடம் காண்பிக்கத் துடித்த 'மனுஷீக நியாயம்' முடிவில், இயேசுவை கொலை செய்திட மூர்க்கம் கொண்டதே! இவ்வாறு, இயேசுவிடம் 'மனுஷீக நியாயம்' எடுபட்டு போகும்படி நடந்த சம்பவங்கள், தேவன் அவரை நொறுக்க சித்தம் கொண்ட செயல் என, ஏசாயா 53:8-10 கூறுகிறதல்லவா!

> **"இதுவே தேவன் விரும்பிய செயலென்றும், அது கர்த்தருடைய வல்ல கரத்தினால் இயேசுவுக்கு வாய்த்தது என, 10-ம் வசனத்தின் கடைசிப் பகுதி கூறுவதை 'அவருடைய சந்ததியாக எழும்பும்' நாம் அனைவரும், கருத்தாய் மனதிற்கொண்டு பின்பற்றக்கடவோம்!**

அந்தப் பெண் தேவனுடைய பார்வையில் "நேர்த்தியான செயல்" செய்திருக்கிறாள், என இயேசு கூறினார்! (மாற்கு 14:6). மேலும் "மனுஷீகம் ஒழித்து, தெய்வீகம் மலரச் செய்திடும்" **இந்த சுவிசேஷம்** அல்லது இந்த நற்செய்தி, உலககெங்கும் பிரசங்கிக்கப்பட இயேசு வாஞ்சித்தார்! "அவள் நினைவாக" அவளது செயல் சொல்லப்படும்! எனவும் இயேசு அறிவித்தார்! (வச.9). மனுஷீகம் நாடும் இந்த அழகிய 'சிமிழ்' உடைந்து, தெய்வீக நளதம் நம் ஜீவியத்திலும், நம் வீட்டிலும், நம் சபையிலும் மணம் வீசுவதாக! ஆமென்.

- T.ரத்தினகுமார்



## ஜீவ ஒளி ஏற்றிய "கிறிஸ்துவின் சாயல்" புத்தக ஆசிரியர்!

# தாமஸ் கெம்பீஸ்

13-ம் நூற்றாண்டில், கார்ல்ஹெம் என்ற மிகப்பெரிய வேதாசிரியர் தன் புத்தகத்தில் "தன்னைப் புகழ்பவர்களையல்ல, பின்பற்றும் சீஷர்களையே இயேசு விரும்புகிறார்" என்ற ஆச்சரியமான வாக்கியத்தை தன் புத்தகத்தில் எழுதிவைத்தார். மெய்யாகவே, அவர் கூறியபடி 'எண்ணற்ற ஜனங்கள் இயேசுவை புகழுகிறார்கள்! ஆனால், அவரைப் பின்பற்றும் ஒரு சீஷனை கண்டுபிடிப்பது' அரிதாக அல்லவோ இருக்கிறது. அந்த மெய்யான சீஷன் யார்? அவன் எப்படி வாழ்கிறான்? என்ற கேள்விக்கு, 14-ம் நூற்றாண்டில் வெளிவந்த "கிறிஸ்துவின் சாயல்" (The Imitation of Christ) என்ற தலைப்பில் 'தாமஸ் கெம்பீஸ்' எழுதிய ஆங்கிலப்புத்தகம் மிகச்சிறந்த விடையாய் இருந்தது. அதில் வலியுறுத்தி எழுதப்பட்டதெல்லாம் "ஒருவன் கிறிஸ்துவுக்கு பாராட்டும் கீழ்ப்படிதலே பிரதானம்" என்ற மையக்கருத்தை பிரதிபலித்தது. தாமஸ் கெம்பீஸ், ஹாலந்து தேசத்திலிருந்த அன்றுள்ள பிரதரர்ன் சபை 'செயின்ட் ஆக்னஸ்' கல்விச்சாலையில் மொழிபெயர்ப்பாளரும், ஆவிக்குரிய ஆலோசகராகவும் நன்மதிப்பு பெற்றிருந்தார்.

தாமஸ் கெம்பீஸ் எழுதிய 'கிறிஸ்துவின் சாயல்' புத்தகம், சில ஆண்டுகளுக்கு முன் 'கார்ல்ஹெம்' எழுதிய சாரத்திற்கு ஒப்பாயிருக்கிறது என்று சிலர் வாதாடினர். ஆனால் தாமஸ் கெம்பீஸ் அந்த வாதத்திற்கு ஒரே விடையாய் "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்து பாருங்கள்" என்ற தாவீதின் வாசகத்தையே பதிலாய் வைத்தார்! தேவஒளியில் இயேசுவை பின்பற்றுபவன் இருளில் நடக்கமாட்டான் என்றே வேதம் கூறுகிறது. இவ்வாறாக வசனம் கூறுகிறபடியால் "இயேசுகிறிஸ்துவின் ஜீவியமே" நமது பிரதான தியானமாய் மாற வேண்டியது அவசியமாயிருக்கிறது. தேவனையும் தேவ குமாரனாகிய கிறிஸ்துவையும் அன்புகூர்ந்து, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வதை தவிர, மற்ற அனைத்தும் மாயை என்று அறிவது நலமல்லவா!

> *"மெய்யாகவே நியாயத்தீர்ப்பு நாளில் நாம் விசாரிக்கப்படும் போது எவைகளை வாசித்தோம்? நாம் என்ன செய்தோம்? எவைகளை பேசினோம்? மார்க்க அனுசாரங்களை எவ்வளவு கைக்கொண்டோம்? அவைகள் யாதொன்றும் விசாரிக்கப்பட போவதில்லை. உங்கள் தேவஅன்பும், அதற்கேற்ற கிரியைகள் மாத்திரமே விசாரிக்கப்படும்!*

தேவனுடைய பார்வையில் நீங்கள் எப்படி வாழ்ந்தீர்கள்? என்ற ஜீவியத்திற்கு ஈடுஇணையில்லை! உங்களுக்குள் கிறிஸ்து வாசமாயிருக்கும்போது "எல்லாவற்றிற்கும் போதுமான வாழ்க்கையில்" ஐசுவரியவானாய் இருப்பீர்கள். அப்போது, அவரே உங்களின் உண்மையுள்ளவரும், போஷித்து பாதுகாப்பவருமாய் இருப்பார்! ஏனெனில், எந்த மனுஷனும் இந்த பூமியில் மாறுவான், மறைந்து போவான்! ஆனால் கிறிஸ்துவோ என்றென்றும் நிலைத்திருந்து, நம்மோடிருந்து காப்பார்.

இவ்வாறாக, 'கிறிஸ்துவின் பிரதிபலிக்கும் சாயலை' அவர் பெற்றதுமல்லாமல், 'கிறிஸ்துவின் சாயல்' என்ற ஆச்சரியமான புத்தகத்தின மூலமாய் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் எடுத்துரைத்தார்!

– நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## ‘பாவ களைகளை’ தன் ஜீவியத்தில் விதைப்பது அபாயம்!

**1868**ஆம் ஆண்டு பாரீஸ் நாட்டில் நடந்ததோர் வேதாகம கண்காட்சி சாலை! காட்சி சாலையின் சுவரில் ஒரு படம் தொங்கிக் கொண்டிருந்தது. அது களைகளை விதைக்கும் ஒரு மனிதனின் காட்சியாகும்! படத்தின் கீழ் “களைகளை விதைக்கும் மனிதன்” என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. அவனுடைய முகம் பித்துப்பிடித்த கோரபயங்கரமாயிருந்தது! அவனுடைய கரத்திலே ‘களை வித்துக்கள்’ அடங்கியதோர் கூடை இருந்தது. அவன் ஒவ்வொரு முறையும் ஒரு களையை பூமியிலே விதைக்கையில், அவன் உடல் நடுங்கியது!

அன்பானவர்களே, நீங்கள் களைகளை விதைத்தால் களைகளையே தான் அறுப்பீர்கள்! மதுபானம் விற்போரும், சூதாட்டக்காரர்களும், கொலைபாதகரும், பாலிய குற்றம் புரிந்து மற்றவர்களை நாசமடையப் பண்ணியவர்களும் மனந்திரும்பாமல், பரலோகத்திற்குள் பிரவேசிக்கக்கூடும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களோ? இல்லவே இல்லை. “களைகளை விதைப்போர் களைகளையேதான் கட்டாயம் அறுக்கவேண்டும்” என்ற உண்மை, உங்கள் உள்ளத்தை தொட்டு, உங்களை மாற்றுவதாக!

இனிமேலாவது, விழிப்புடன் வாழுங்கள்! நித்தியத்துக்கடுத்த காரியங்களோடு நீங்கள் விளையாட வேண்டாம். கண்ணைப் பறிக்கும் வானத்தின் மின்னலோடு விளையாடுங்கள்! துரிதமாகப் பரவக்கூடிய கொடிய தொத்து வியாதிகளோடுகூட விளையாடுங்கள்! ஆனால், நித்திய நியாயத்தீர்ப்போடு மாத்திரம் எக்காரணத்தைக் கொண்டும் விளையாடாதேயுங்கள்! தேவனுடைய வழிகள், நம்முடைய வழிகளைப்போலான, வழிகள் அல்ல. வானத்திற்கும் பூமிக்குமுள்ள உயரத்தைப்போலவே, தேவனின் வழிகள் நம்முடைய வழிகளுக்கு அப்பாற் பட்டதாயிருக்கின்றது. மிகுந்த உல்லாசமாய் பாவத்தோடு சஞ்சரித்து வாழும் மாந்தர்கள் யாராயிருந்தாலும், ஒருநாளில் நியாயாதிபதி முன்பாக நின்று ஆக்கினைதீர்ப்பு அடைய வேண்டும் என்ற உண்மையை உணருவோமாக! ஓ வாலிபனே, இரட்சகர் இயேசு அருளும் மீட்பின் புண்ணியம் ஒன்றே, உன்னை மாற்ற ஒரே வழி என்பதை அறிவாயாக! இயேசுவின் அந்த புண்ணியமே, தேவ கோபாக்கினைக்குத் தப்பி, நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் உன்னை நடத்தும்!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப
**QR** பயன்படுத்தவும்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
*Editor* **T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**

**maduraichristianfellowship**
**@indianbk**